**தலைப்பு 285 – விவசாயத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள், வாணிப முற்பணக் கணக்கு மற்றும் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் 3.2.2 அட்டவணையில் அடங்கியுள்ள வருமானக் குறியீடு தொடர்பான வருமானக் கணக்கு, விவசாயத் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்து நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்குகளில்ன் தன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு நோக்கெல்லை**

---

தலைப்பு 285 – விவசாயத் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஜூன் 05 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும்

பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக விவசாயத் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.18 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128 பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை | கணக்கீட்டு உத்தியோகத்தர் களினால் ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 128(1)(அ) | அரசினால் விதிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் அளிக்கப்பட்ட விடயத்திற்கான நிதி ஏற்பாடு கள் வழங்கவதில் பாராளு மன்றத்தின் சவால்கள் தொடர்பாக கவனம் செலுத்தி தமது திணைக்களத்தின் அலுவல்களை புத்தி நுட்பத்துடன் திட்டமிட்டு செயற்படுத்துவது எனவும் மற்றும் குறிப்பிட்ட ஆண்டிற்கு உரிய நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு மற்றும்/ அல்லது குறிப்பிட்ட இலக்குகளை வெற்றி கொள்வதற்கு முயற்சி ஒன்று எடுக்கப்படுவது எனவும், | 1. செயல் நடவடிக்கை திட்டத்தில் குறை பாடுகள் | 2.1.1(அ) |
| | | 2. வலையம் சார் விவசாய சிக்கல்கள் இணங்காண்பதற்கான ஆய்வுத் திட்டத்தில் குறைபாடுகள் | 2.1.1(ஆ) |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் கணக்கீட்டிற்காக அமைப்பு வெற்றிகரமானது எனவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசுக்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை பிழையின்றியும் தீர்மானிப்பதற்காக அவற்றை முறைப் பிரகாரகும் முற்றாகவும் தாமதமின்றியும் சேகரிப்பதற்கு மற்றும் கிடைக்கும் பணத்தை கணக்கீடு செய்வதற்கும், அரசு சார்பாக பொறுப்புக்களை மேற்கொள்வதற்கு அதிகாரம் அளிப்பதற்காகவும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குவதின் மேற்பார்வை மற்றும் பரிசோதனை செய்வதற்கு மற்றும் அந்த அரச நிதியத்தில் இருந்து தாமதமின்றியும் பிழையின்றியும் கொடுப்பனவு செய்வதற்கு அவற்றில் போதியளவு ஏற்பாடுகள் மேற்கொள்வது, | 1. வரையறைகளை மிகைத்து ஈடுபாட்டு பொறுப்பு மற்றும் பொறுப்புக்கள் மேற்கொள்ளல் | 2.5 |
| | | 2. வாணிப முற்பணக் கணக்கு தொடர்பாக முனைப்பழிக்கப்பட்ட கணக்காய்வு அபிப் பிராயம் தெரிவித்தல் | 2.12(அ) |
| | | 3. கொடுக்கல் வாங்க ளை தீர்த்து மூடும் விடயங்கள் நடை பெறும் முற்பணக் கணக்குகளில் தொழிற்பாட்டு நட்டங்களை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை | 2.13(அ) |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரச ஏனையும் குறைநிரப்பு ஏற்பாடுகள் தமது திணைக்களத்தினால் கடைபிடிக்கப்படுவதாகவும் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள ஏற்பாடுகள் வழங்குவதாகவும் | 1. காலம் கடந்த வைப்புக்கள் தொடர் பாக நடவடிக்கை எடுக்காமை | 2.15 |
| | | 2. பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப் படாமை | 2.16 |
| | | 3. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் இணக்க மின்மைகள் | 2.17<br>2.18 |
| | | 4. உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வழங் கும் நிகழ்சித் திட்டங்கள் போதி யளவினதாக நடாத்தி யிருக்காமை | |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஈ) | பெறுவனவுகள் கொடுப்பனவுகள் மற்றும் வழங்கல்களுக்காக போதிய ளவு அகச் செவ்வை முறை யொன்று நடத்திச் செல்லல் மற்றும் அந்த முறையில் செயற்பாடுகளை காலத்திற்கு காலம் பரிசோதனை செய்யப்படுவதாகவும், | முகாமைத்துவக் குறைபாடுகள் | 2.6 |
| 128(1)(உ) | அரசுக்கு சொந்தமான அல்லது அரசின் பொறுப்பில் காணப்படும் பணம், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவானதும் மற்றும் முறையான ஏற்பாடுகள் ஈடுபடுத்துவதாக வும் அவை இடையிடையே மெய்மை யாய்தல் செய்யப்படு வதாகவும், அவற்றை உரிய முறையில் தீர்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அவ்வாறு தீர்த்தல் செய்வதற்கு உரிய பிரமாணங்களுக்கு மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க மேற்கொள்வது எனவும், | 1. அரசுக்கு சொந்தமான சொத்துக்களை உச்ச வினைதிறனுடன் பயன் படுத்துதல> | 2.4(அ) |
| | | 2. சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தாமை. | 2.4(ஆ) |
| | | 3. கிரயம் மற்றும் வினைத்திறன் இன்றி சொத்துக்களை அகற்றுதல். | 2.4(இ) |
| | | 4. விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன் படுத்தப்படும் சொத்துக் கள் | 2.4(ஈ) |
| | | 5. முறைசாராத விதமாக வெளித்தரப்பினருக்கு கொடுத்துள்ள சொத்துக்கள் | 2.4(உ) |
| | | 6. வேறு நிறுவனங் களுக்கு சொந்தமான சொத்துக்களை முறைசாரா விதமாக பயன்படுத்துதல் | 2.4(ஊ) |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள கட்டணங்கள் ஆகியனற்றை அறவீடு செய்வதற்கு விஷேட ஏற்பாடுகள் மேற்கொள்வ தெனவும் அந்த கருமம் சாட்டப்பட்டிருந்த உத்தியோ கத்தவர்களினால் நிலுவை பணம் தொடர்பாக அவற்றை அறவீடு செய்தலை விரைவு படுத்துவதற்காக எடுக்கப்பட்ட கட்டங்கள் தொடர்பாக குறைந்தளவு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வேறு முறையில் கட்டளையிட்டுள்ளவாறு அல்லது தனக்கு அறிவிப்பதாகவும், | 1. அரச உத்தியோகத்தர் களுக்கான முற்பணக் கணக்கில் நிலுவை கடன் மீதிகள் அறவீடு செய்யாமை | 2.11 |
| | | 2. வாணிப முற்பணக் கணக்கில் நிலுவை யாகவுள்ள கடன் மீதி களை அறவீடு செய்யாமை | 2.12(அ) |
| | | 3. கொடுக்கல் வாங்கல் களை தீர்த்து மூடப் படும் முற்பணக் கணக்குகளின் நிலு வைக் கடன் மீதிகளை அறவீடு செய்யாமை | 2.13(ஆ) |
| 128(1)(ஐ) | அரசாங்க அலுவல்கள் நிறைவேற்றும் போது எதிர்பார்க்கும் சிக்கனம், வினைத்திறமை, முறைசார் விதமாக மற்றும் நேர்மைத் தன்மை ஆகிய விடயங்கள் தொடர்பாக போதிய கவனத்துடனும் தனது திணைக்களத்தின் அலுவல் கள் மேற்கொள்வதெனவும் | 1. செயல் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள கரும ங்களை நிறை வேற்றாமை | 2.1.2 |
| | | 2. எதிர்பார்த்த நலன்கள் கிடைக்காமை | 2.1.3 |
| | | 3. வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களை செயற்படுத்துவதில் குறைபாடுகள் | 2.2 |
| | | 4. அங்குனுகொல பலஸ்ஸ விவசாய பாடசாலைக்கான கேட்போர் கூடம் நிர்மாணிப்பதில் குறைபாடுகள் | 2.3.1 |
| | | 5. குண்டசாலை பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் நிர்மாணி ப்பதில் குறைபாடுகள் | 2.3.2 |
| 128(1)(க) | கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் தான் பொறுப்பு சொல்ல வேண்டிய செலவுத் தலைப்பொன்றில் ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டங் களுக்காக நிதியாண்டு இறுதி யில் ஒதுக்கீட்டு கணக்கு ஒன்று பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பி க்கப்படும் எனவும், | மிகை நிதி ஏற்பாடுகள் மேற்கொண்டிருத்தல் | 2.9 |

| | | | |
|---|---|---|---|
| 128(2)(ஈ) | சேகரித்துக் கொள்ளல் தொடர்பாக தான் பொறுப்பாக உள்ள அரச வருமானத்தில் ஏதேனும் ஒரு பகுதி வேறு திணைக்களங்களில் இருந்து மற்றும் அலுவலகங்களினால் சேகரிக்கப்படின் அதன் திணைக்களங்களின் மற்றும் அலுவலகங்களில் இருந்து அறிக்கைகளை பெற்று அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அரச வருமான மதிப்பீடுகளுக்கும் முறையே முன்கூறிய (அ),(ஆ) மற்றும் (இ) பந்திகளின் பிரகாரம் தான் தயாரிக்கும் அரச வருமானக் கணக்குகளில் மற்றும் அறிக்கைகளிலும் உள்ளடக்குவதாகவும். | சட்டங்களில் குறிப்பிடப் பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பாட்டு வருமானத் தொகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. | 2.10 |

**2. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**2.1 செயலாற்றுகை**

**2.1.1 திட்டமிடல்**

**(அ) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டிற்கான தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் கருமங்களை செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ள காலச்சட்டகம் மற்றும் விளைவுகள் உட்படுத்தியிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டிற்கான நாளதுவரையாக்கப்பட்ட திணைக்களத்தின் அமைப்பு கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியணி மற்றும் தற்போது கடமையாற்றும் பதவியணியினர் தொடர்பான விபரங்கள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிட்டிருக்கவில்லை.

(iii) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் பல சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் பெறுகைகள் திட்டம் திருத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) வருடாந்தம் செயற்படுத்துவதற்காக திட்டமிட்டிருந்த பயிற்சி வழங்கள் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் சேவை ஒழுங்குபடுத்தும் பயிற்சி நிறுவனத்தின் தொழிநுட்ப செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) வலயம்சார் விவசாயிகளின் சிக்கல்களை இனங்காண்பதற்கான ஆய்வுத் திட்டம்**

ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் விவசாய பிரஜைகளின் சிக்கல்களை இனங்கண்டு அவற்றில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய பரப்புகள் தொடர்பாக ஆய்வாளர்களின் விஷேட கவனத்தை செலுத்துததல், பண்டாரவெள வலயம் சார் விவசாய ஆய்வு நிலையத்தின் நிறைவேற்றப்பட வேண்டிய பிரதான கடமை ஒன்றாக இருந்தது. வலயத்தின் விவசாயிகளின் சிக்கல்களை ஆய்வு செய்து முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டிய பரப்புகளை இனங்கண்டு அவற்றிற்காக பரிகாரம் காண்பதற்கான ஆய்வு திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. அதற்கு பதிலாக ஒவ்வொரு ஆய்வாளர்களினதும் தற்றுணிவின் பிரகாரம் பரப்புகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 2.1.2 செயல் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள கருமங்களை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆண்டு தொடர்பாக விதைகள் மற்றும் நடல் பண்டங்கள் அபிவிருத்தி நிலையத்தின் மூலம் நிறைவேற்றப்பட்ட தொழிநுட்ப செயற்பாடுகளின் முன்னேற்றத்தை வருடாந்த இலக்குகளுடன் இணக்கஞ் செய்த போது, 12 செயற்பாடுகளில் 07 செயற்பாடுகளின் முன்னேற்றம் 30 சதவீதம் முதல் 53 சதவீதம் வரையான வீச்சு அளவில் காணப்பட்டது.

(ஆ) 2015 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பண்புசார் மற்றும் சுகாதார பாதுகாப்பு விவசாய உற்பத்தி பொருட்களுக்காக சிறந்த விவசாய கிரியைகளின் அபிவிருத்தி செயற்திட்டத்தின் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 13 செயற்பாடுகளில் 07 செயற்பாடுகள் 2017 ஆகஸ்ட் மாதம் அளவிலும், ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.1.3 எதிர்பார்த்த நலன்கள் கிடைக்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதானமாக பயிர்செய்கை மேற்கொள்ளும் 05 வகையான மரக்கறி வகைகள் தொடர்பாக உள்நாட்டு மரக்கறி விதைகளின் தேவை முற்றாக இறக்குமதியிலேயே தங்கியிருந்ததுடன், மேலும் நிறைய பயிர்செய்யும் 12 வகையான மரக்கறி வகைளின் உள்நாட்டு விதை தேவையில் திணைக்களத்தினால் வழங்கப்படும் அளவு 6.03 சதவீதத்தை விட குறைவாக மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) குண்டசாலை பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தைச் சேர்ந்த சுமார் 1.5 ஹெக்டயர் தரையில் 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது கூட்டுத்தொகை ரூபா 912,085 இற்கான செலவில் அன்னாசி மற்றும் வாழைப்பயிர் செய்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியாகிய 2017 ஆகஸ்ட் 11 திகதி அளவில் வெற்றிகரமான நிலைமையில் காணப்பட்ட அன்னாசி கன்றுகள் ஏதும் காணப்படாததுடன் 350 வாழைக் கன்றுகள் மாத்திரம் காணப்பட்டன.

(இ) 2013 ஆண்டு முதல் 2017 ஜூலை 31 திகதி வரை அரசாங்க விவசாய பண்ணைகளில் 6 இன மரக்கறிகள் தொடர்பாக இனக்கலப்பு விதைகள் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. 2017 ஆண்டின் போது கத்திரக்காய், வெண்டிக்காய், கறிமிளகாய் இனங்களின் விதைகள் உற்பத்தி முற்றாக நிறுத்தப்பட்டிருந்தது. ஏனைய 3 இன மரக்கறிகளின் விதை உற்பத்தி 3.4 கி.கிராம் முதல் 78.1 கி.கிராம் வரையான விதைகள் வீச்சு அளவில் காணப்பட்டது. அதன் பிரகாரம் உயர்ந்த தரமான விதை உற்பத்தி தொடர்பில் குறைவாக கவனம் செலுத்தப்பட்டுள்ளமை திணைக்களத்தின் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு பாதகமாகியுள்ளது.

(ஈ) 2017 ஜூலை 31 திகதி அளவில் வேறு பரப்பு பயிர்களின் வருடாந்த தேசிய விதை தேவையான இலக்குகளை பூர்த்திசெய்தல் (குரக்கன் பயிரைத் தவிர) 2.9 சதவீதம் முதல் 20.63 சதவீத வரை வீச்சளவில் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(உ) உள்நாட்டு உருளைக் கிழங்கு விதை உற்பத்தியினை மேம்படுத்தும் செயற்திட்டம் 2014 ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான கடந்த 04 வருடங்களின் போது ரூபா 195.5 இற்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 169.7 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. விவசாய திணைக்களத்தின் 05 விவசாய பண்ணைகள் உருளைக் கிழங்கு விதை உற்பத்தி செயற்பாடுகளில் பங்களிப்புச் செய்திருந்தன. அச் செயற்திட்டம் 2014 ஆண்டின் போது செயற்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் விதை உற்பத்தி 2014 ஆண்டிற்கு ஒப்பாக 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது முறையே 1.4 சதவீதம் மற்றும் 10 சதவீதம் ஆக அதிகரித்திருந்தது.

(ஊ) அழுத்தரம விவசாய பண்ணையில் போதியளவு TOM-EJC இன மா தாய் தாவரம் காணப்பட்டமையினால் மாங்கன்றுகளை ஒட்டுச் செய்யும் கருமங்களுக்குத் தேவையான நடல் பண்டங்கள் மஹாவலி விவசாய பண்ணைக்கு உரிய மா பயிர்செய்கையில் இருந்து வழங்கப்பட்டிருந்தது. மஹாவலி விவசாய பண்ணைக்கு உரித்தான பயிர்செய்கைகளின் விதைகள் சான்றுபடுத்தும் சேவையில் இருந்து தாய் தாவரம் என தெரிவு செய்தல் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக உற்பத்தி செய்யப்பட்ட ஒட்டுக் கன்றுகளுக்காக திணைக்களத்தின் கன்றுகளை சான்றுபடுத்தல் மேற்கொள்ளப்படாமல் அதற்குப் பதிலாக திணைக்கள இலட்சினையுடன் விவசாய பண்ணையினால் கன்றுகள் வழங்கப்பட்டிருந்தன.

(எ) பூந்தோட்ட பயிர்கள் தொடர்பாக நிலைபேறான மற்றும் ஆக்கபூர்வமான தொழிநுட்ப தொடர்பான ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி விடயங்களுக்கு பங்களிப்பினை வழங்கும் நோக்குடன் பஸ்யால பூந்தோட்டக் கலை ஆய்வு விவசாயப் பண்ணை நிறுவப்பட்டிருந்தது. கடந்த 07 ஆண்டு காலப்பகுதியில் அந்த விவசாயப் பண்ணையில் ரம்புட்டன் பயிர்செய்கை தொடர்பான ஆய்வு ஒன்று மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஏ) 2012 ஆண்டின் போது விதை உருளைக் கிழங்கு உற்பத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் G-0 விதைகள் உருளைக் கிழங்கு உற்பத்தியை அதிகரிக்கும் குறிக்கோளுடன் ரஹங்கல விவசாய ஆய்வு நிலையத்திற்கு ரூபா 4.5 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. மீளாய்வாண்டு இறுதி அளவில் அந்த நிலையத்தினால் உருளைக் கிழங்கு விதைகள் உற்பத்தி செய்திருக்கவில்லை. 2014 ஆண்டின் போது காணப்பட்ட சீரற்ற காலநிலையின் காரணமாக அந்த உருளைக் கிழங்கு வீடுகளுக்கு ஏற்பட்டிருந்த சேதத்தை பழைய நிலைமைக்கு ஆக்குவதற்காக மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஐ) கடந்த 10 ஆண்டு காலப்பகுதியில் பண்டாரவெல விவசாய ஆய்வு நிலையத்தின் மூலம் விதைகளை இனவிருத்தி செய்யும் கருமத்திற்காக பங்களிப்பு செய்தல் மிகவும்

குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. 3 இனப் பயிர்கள் மாத்திரம் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த இனங்களின் விஸ்தரிப்பும் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. அதே போல் விஸ்தரிப்பு குறைவடைவதந்த காரணத்தை கண்டறிந்து அந்த ஆய்வுகளை அபிவிருத்தி செய்து நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஒ) இலங்கையினால் இறக்குமதி செய்யப்படும் மரக்கறி விதைகள் கணிசமான அளவு விவசாயியின் எதிர்பார்ப்புக்கு பொருந்தக்கூடிய விதமாக காலத்திற்கு ஏற்ப மாற்றப்படும் இனங்களாகக் காணப்பட்டன. இதன் காரணமாக உள்நாட்டில் உற்பத்தி செய்து வினியோகிக்கப்படுகின்ற மரக்கறி இனங்கள் விவசாயிகளின் எதிர்பார்ப்பு மட்டத்திற்கு நெருங்கி இருக்கவில்லை. இதன் காரணமாக எதிர்காலத்தில் இறக்குமதி செய்யும் விதை இனங்களின் மீது தங்கியிருக்க வேண்டி ஆபத்து தொடர்பாக திணைக்களத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஓ) 1990 பத்தாண்டுகளில் சோளம் இனக்கலப்பு செய்யும் தேவையினை இனங்கண்டு அதற்கு நுழைந்திருந்ததுடன், 2004 ஆண்டின் போது அவற்றில் ஒரு இனம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் அந்த இனத்தில் 2016 ஆண்டின் போது 169 கிலோ கிராம்கள் வெளிக்களத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அவை உள்நாட்டு விதை தேவையில் 0.01 சதவீதமான குறைந்த பெறுமதியினை கொண்டிருந்தது.

(ஔ) பெரிய வெங்காய பயிர்செய்கைக்காக புதிய வகையான விதை வகைகளை அறிமுகப்படுத்துதல், அவற்றிற்கு ஏற்படும் நோய்கள் மற்றும் பீடைகள் தொடர்பாக பரிசோதனைகள் மேற்கொள்ள்பட்டு உள்நாட்டில் வெங்காயம் உற்பத்தியினை அதிகரிக்கும் அடிப்படைப் பொறுப்பு மஹ இலுப்பல்லம வெளிக்கள பயிர்களுக்கான ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திற்கு சாட்டப்பட்டிருந்த கடமை ஒன்றாக இருந்தது. 1977, 2009 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகளின் போது 03 இன பெரிய வெங்காயம் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தியிருந்த போதிலும் கடந்த 3 ஆண்டுகளின் அவற்றின் விஸ்தரிப்பு உள்நாட்டு விதை தேவையில் 0.01 சதவீதம் முதல் 33 சதவீதம் வரையான வீச்சு அளவில் காணப்பட்டது.

(க) இலங்கையில் பீடைநாசினிகளை பதிவு செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் அதிகாரம் பீடைநாசினி பதிவாளர் அலுவலகத்திற்கு சாட்டப்பட்டிருந்தது. இலங்கையில் பதிவு செய்யப்பட்ட 200 வகையான பீடை நாசினிகளில் 186 வகை எனப்படும் 93 சதவீதத்திற்கான பீடை நாசினிகள் தொடர்பாக ஆய்வுகூடத் தரப் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ங) 1994 இன் 6 ஆம் இலக்க பீடைநாசினிகளை கட்டுப்படுத்தும் (திருத்திய) சட்டத்தின் பிரகாரம் நாடு பூராகவும் காணப்படும் அனைத்து பீடை நாசினிகள் விற்பனை நிலையங்களினால் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றுக்கொள்ளல் கட்டாயமாக இருந்தது. அச் சட்டத்தில் 21(4)(அ) பிரிவின் பிரகாரம் வழங்கியிருந்த அனுமதிப்பத்திரம் 12 மாதங்களுக்காக காலவரையறைக்கு செல்லுபடியாகும் காலம் செயற்பாட்டில் காணப்பட்டது. 2016 ஆண்டின் போது பதிவு செய்யப்பட்டிருந்த 1461 பீடைநாசினி விற்பனை நிலையங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்துள்ள 440 விற்பனை நிலையங்கள் 2017 திசெம்பர் 31 திகதி அளவிலும் அனுமதிப்பத்திரங்களை புதுப்படுத்தியிருக்கவில்லை.

(ச) புதிய இனக் கலப்பு மற்றும் தெறிந்த மகரந்த சேர்க்கை மூலம் விதைகள் உற்பத்தி செய்தல் மற்றும் அடிப்படை விதை உற்பத்திகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் மஹஇலுப்பல்லம வெளிக்கள பயிர்கள் ஆய்வு நிறுவனத்திற்கு 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது கிடைத்திருந்த நிதி ஏற்பாடுகளின் மூலம் முறையே ரூபா 1.43 மில்லியன் மற்றும் ரூபா 4.91 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

மிளகாய், சோளம் மற்றும் வெங்காயம் பயிர்கள் தொடர்பாக விதைகள் உற்பத்திக்காக அந்த நிதி ஏற்பாடுகள் பயன்படுத்த வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக நீர்பாசன நீர் முறைமையினை அபிவிருத்தி செய்தல், வலை வேலி ஒன்று தயாரித்தல், அலுவலகத்திற்கு தரை ஓடுகள் பதித்தல் மற்றும் வலை வீடுகள் நிர்மாணித்தல் ஆகிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஞ) அங்குனுகொலபஸ்ஸ பருப்பு வகைகள் பயிர்கள் மற்றும் எண்ணெய் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையத்திற்கு 11 ஆய்வு உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்த போதிலும், கடந்த 08 வருட காலப்பகுதியில் 03 வகையான பயிர்களைச் சேர்ந்த 06 விதை இனங்கள் மாத்திரம் விடுவிக்கப்பட்டிரந்தது. அந்த இனங்களில் 2014 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையான காலப்பகுதியில் 02 இனங்களில் முறையே 2 கி.கி. மற்றும் 459 கி.கி. அளவு திணைக்களத்தினால் வெளிக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அவை தேசிய விதை தேவையில் 0.0003 சதவீதம் மற்றும் 0.09 சதவீதம் ஆகக் காணப்பட்டது.

(ட) வெங்காயம், சோளம் மற்றும் மிளகாய் ஆகிய பயிர் தொகுதிகளில் புதிய இனங்களை உண்டாக்குதல் மற்றும் விதைகள் உற்பத்திக்காக வெற்றிகரமான முறையில் ஆய்வுகள் மேற்கொள்ளும் குறிக்கோளுடன் 2013 ஆண்டின் போது செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டு அதற்காக ரூபா 50 மில்லியன் தொகை நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. 2017 ஆண்டு இறுதி அளவில் அதற்காக கூட்டுத்தொகை ரூபா 46 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. கடந்த ஆண்டுகளின் போது வெங்காயம், சோளம் மற்றும் மிளகாய் ஆகிய பயிர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட 10 செயற்பாடுகளில், செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த அடிப்படை குறிக்கோளுடன் தொடர்புடைய 02 செயற்பாடுகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

(ண) 2017 ஆண்டின் போது வெளிநிறுவனங்கள் மற்றும் விவசாய திணைக்களத்தின் பீடைநாசிகளை பதிவாளர் அலுவலகத்தின் ஆய்வு கூடங்களின் மூலம் மரக்கறி மற்றும் பழவகை வகைகளின் தொடர்பாக 483 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டிருந்தன. அந்த மாதிரிகளிலிருந்து 294 மாதிரிகளின் உரிய பீடைநாசியின் மீதிகளின் எல்லைகளை மிகைத்திருந்தது. அதன் பிரகாரம் பீடைநாசிகள் பதிவாளர் அலுவலகத்தின் முக்கிய கருமங்களான பீடை நாசினிகளை பயன்படுத்துவதை ஒழுங்குபடுத்துதல் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.2 வெளிநாட்டுதவிச் செயற்திட்டங்களை செயற்படுத்துதல்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2017 ஆண்டின் போது பழங்கள் அறுவடைக்குப் பின்னரான செயற்திட்டத்தின் கீழ் 644,963 அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டு பழங்கள் சீரிடுதல் நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையம் நிர்மாணிக்கும் போது ஆரம்ப கணிப்பீடு மற்றும் முறையான முன்சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொண்டிருக்கவில்லை. இதன் காரணமாக நிர்மாணிக்கப்பட்டிருந்த இந்த பழங்கள் சீரிடுதல் நிலையம் 2018 மே 10 திகதி வரை செயற்படாத நிலையில் காணப்பட்டது.

(ஆ) Anyigonon Leplopus என்ற காட்டு இனத்தாவரத்தை பயன்படுத்தி உயிரின் உரமொன்று உற்பத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக ரூபா 427.500 இற்கான நிதிஏற்பாடு கிடைத்திருந்தது. அந்த செயற்திட்டங்கள் ஆரம்ப கட்டத்திலேயே கைவிடப்பட்டிருந்தது.

## 2.3 பெறுகைகள் நடவடிக்கை முறையில் குறைபாடுகள்

### 2.3.1 அங்குணுகொல பலஸ்ஸ விவசாய பாடசாலைக்கான கேற்போர்கூடம் நிர்மாணித்தல்

மேற்கூறிய நிர்மாணவேலைக்காக ரூபா 11.21 மில்லியன் தொகை இற்கான மதிப்பீட்டு பெறுமதி ஒன்றின் மீது ஒப்பந்தவேலை வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 2.14.1 பிரகாரம் ரூபா 10 மில்லியனை விட கூடிய ரூபா 100 மில்லியன் விட குறைந்த பெறுகைகள் திணைக்கள பெறுகைகள் குழுவின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டும் எனினும் இந்த பெறுகை திணைக்கள பெறுகைகள் குழுவின் கீழ் மேற்கொள்ளப்படாமல், பிரதேச பெறுகை குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) இந்த ஒப்பந்த வேலைக்காக ஒப்பந்தக்காரரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மூன்றாவது சிட்டைக்காக 2018 ஜனவரி 29 திகதி ரூபா 977.040 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அந்த சிட்டையில் 4.3 mm முதல் 0.47 mm கனத்தையுடைய வெய்தல் தகரங்கள் வழங்குதல் மற்றும் பொருத்துதல் விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் அதற்காக ரூபா 849,600 தொகை நிதிப் பிரமாணம் 137,138 மற்றும் 139 இன் ஏற்பாடுகளக்கு முரணாக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2017 திசெம்பர் 31 திகதி ஒப்பந்தக்காரரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சிட்டையின் பிரகாரம் 5 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் தரையை கொங்கிரீட் பண்ணி தயாரிப்பதற்காக ரூபா 480,410 தொகை செலுத்தியிருந்த போதிலும் 2018 மே 20 திகதி அளவிலும் அந்த விடயம் நிறைவேற்றப்படாமல் நிதிப் பிரமாணங்கள் 137 மற்றும் 138 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு மாற்றமாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) இந்த நிர்மாண வேலைக்காக தரம் இல்லாத மணல் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 2.3.2 குண்டசாலை பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகம் நிர்மாணித்தில்

மேற்கூறிய நிர்மாண வேலைக்காக 2016 திசெம்பர் மாதத்தில் 135 சீமெந்து பைகளுக்காக ரூபா 126,225 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அந்த சீமெந்து பைகள் கணக்காய்வுத் திகதியாகிய 2017 ஜூலை 21 திகதி அளவிலும் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்ததாக உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) அரசுக்கு சொந்தமான சொத்துக்கள் உச்சமட்ட வினைத்திறனுடன் பயன்படுத்தப்படாமை.

(i) பூந்தோட்ட பயிர்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள கெமா ரேடியேஸன் அலகின் மூலம் மரபணுக்களை உருத்திரிபுபடுத்துவதன் மூலம் புதிய இனங்கள் (Creation Genetic Variation) உருவாக்கும் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதற்காக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக 2015

ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையான காலப்பகுதியில் கூட்டுத்தொகை ரூபா 15.05 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. 2017 அக்தோபர் மாதம் அளவிலும் அந்த அலகினால் குறிப்பிட்ட அலுவல்கள் செயற்படுத்தியிருக்கவில்லை.

(ii) NVQ 3 மற்றும் 4 மட்டத்திலான பயிற்சி பாடநெறிகள் நடாத்துவதற்காக 2016 ஆண்டின் போது சேவை ஒழுங்குபடுத்தும் பயிற்சி நிறுவனத்தின் கட்டிடத்தை ரூபா 6.50 மில்லின் தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அந்த கட்டிட நிர்மாணத்தின் பின்னர் NVQ 3 மட்டத்தில் ஒரு பயிற்சி பாடநெறி மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது பாடநெறிகள் ஏதும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) விதை உருளைக் கிழங்கு உற்பத்திச் செயற்திட்டத்தின் கீழ் பண்டாரவெல வலய விவசாய ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் இழையவளர்ப்பு நடுதல் பிரிவுக்காக 2016 ஆண்டின் போது ரூபா 973,100 தொகை செலவிடப்பட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் மாதம் அளவிலும் அவ் உபகரணங்களை பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

(iv) கிராந்துரு கோட்டே மற்றும் அரலகங்வில விவசாய ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையங்களுக்கு சொந்தமான 29 ஹெக்டயர் வயல் காணி ஆய்வு விடயங்களுக்கு அல்லது விவசாய அலுவல்களுக்காக பயன்படுத்தாமல் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது.

**(ஆ) சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தாமை**

விவசாய திணைக்களத்திற்கு சொந்தமான 2,864.65 ஹெக்டயர் காணியில் 18 காணித்துண்டுகளில் உரிமையை மாத்திரம் உரித்தாக்கியிருந்தது. அவை மொத்த காணிகளில் 23 சதவீதம் அளவினைக் கொண்டிருந்தது.

**(இ) கிரயம் மற்றும் வினைத்திறனின்றிய சொத்துக்களை அகற்றுதல்**

பிராந்திய அலுவலகங்களைச் சேர்ந்த அகற்றுவதகென இனங்கண்டிருந்த 97 வாகனங்கள் 2015 ஜூலை 10 திகதிய 02/2015 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து செயற்பட்டு அகற்றாமல் அலுவலக வளவில் நிறுத்தப்பட்டு காணப்பட்டது.

**(ஈ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளவாறு சில சொத்துக்கள் விளைவற்று மற்றும் குறைபயன்பாட்டுனும் காணப்பட்டதென தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் |
|---|---|---|---|
| (i) | காணி (ஹெக்டயர்) | 0.56 | 3 வருடங்களை விட கூட |
| (ii) | கட்டிடங்கள் | 12 | 3 வருடங்களை விட கூட |
| (iii) | கட்டிடங்கள் | 1 | 1 வருடத்தை விட 3 வருடங்களுக்கு குறைவு |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மோட்டார் வாகனங்கள் | 97 | 3 வருடங்களை விட கூட |
| (v) | இயந்திர உபகரணங்கள் | 108 | 3 வருடங்களை விட கூட |
| (vi) | ஏனைய சொத்துக்கள் | 71 | 1 வருடத்தை விட 3 வருடங்களுக்கு குறைவு |
| (vii) | ஏனைய சொத்துக்கள் | 4,410 | 3 வருடங்களை விட கூட |

**(உ) வெளித் தரப்பினருக்கு கொடுத்துள்ள சொத்துக்கள்**

திணைக்களத்தினால் சில சொத்துக்கள் முறைசாரா விதமாக வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சொத்துக்களின் வகை | சொத்தினை வழங்கியிருந்த நிறுவனம் | பெறுமதி | காலப்பகுதி |
|---|---|---|---|---|
| | | | ரூபா. | |
| (i) | (10) ஹெக்டயார் காணி | இறப்பர் திணைக்களம் | 247,692 | 11 வருடங்கள் |
| (ii) | ஏனைய சொத்துக்கள் | பொலிஸ் நிலையம் மித்தெனிய | 3,975 | 21 வருடங்கள் |

**(ஊ) ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்கள் முறைசாராத விதமாக பயன்படுத்துதல்**

மாகாண விவசாய திணைக்களத்தைச் சேர்ந்த 0.75 ஏக்கர் காணி முறையான அங்கீகாரம் ஒன்று இன்றி 18 வருட காலம் முதல் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

## 2.5 ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வருடாந்த பாதீட்டு எல்லையை மிகைத்து ஈடுபட்டு பொறுப்புக்கள் மேற்கொள்ளல்**

2017 ஏப்ரல் 27 திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 02(அ) பந்திகள் முரணாக 16 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 274 மில்லியன் ஏற்பாடுகளை பயன்படுத்திய பின்னர் 25.4 மில்லியனை மிகைத்து ஈடுபாட்டு பொறுப்பு ஏற்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக 2018 ஆண்டின் போது 57 சந்தர்ப்பங்களில் கூட்டுத்தொகை ரூபா 24.84 மில்லியன் செலுத்தியிருந்த போதிலும் அக்கொடுப்பனவு மீளாய்வாண்டிற்கான பொறுப்புக்கள் என ஒதுக்கீட்டுக் கணக்கில் உட்படுத்தியிருக்கவில்லை.

## 2.6 முகாமைத்துவத் திறமையின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் முகாமைத்துவ பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திணைக்களத்திற்கு சொந்தமான இயந்திரப் பொறியியல் வேலைத்தளங்களின் மூலம் வாகனங்களுக்கான தவணை சேவை மேற்கொள்ளப்படாமல் வெளி நிறுவனங்களில் இருந்து நிறைவேற்றிக் கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக தலைமை அலுவலக மற்றும் அதனது அண்மையில் இருக்கும் பிரிவுகளுக்கு சொந்தமான 350 வாகனங்களுக்காக வருடாந்தம் சுமார் 8 மில்லியன் தொகை கொடுப்பனவு ஒன்று வெளிநிறுவனங்களுக்கு செலுத்துவதற்கு நேரிடுகின்றது என திணைக்களத்தின் பொறியியலாளர் பிரிவில் இருந்து மதிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) ரஹங்கல விவசாய ஆய்வு நிலையத்தின் சுமார் 2 ஏக்கர் காணி தரைப்பகுதியில் பரந்துள்ள நாரத்தை பயிர்கள் (தோடை/ நாரங்காய்) பங்கஸ் நோய் பரவியிருந்தது. அந்த நோயை கட்டுப்படுத்துவதற்காக இடையறாமல் பங்கஸ் கொள்ளிகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. அந்த நிலைமையில் இருந்து தவிர்ந்து கொள்வதற்காக மீளாய்வாண்டு இறுதிவரை குறிப்பிட்ட ஆய்வுகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) ரஹல்கல விவசாய ஆய்வு நிலைய வளவில் பரந்து காணப்படும் உலகத்தில் மிக விலைஉயர்ந்த நட் (Nut) வகையொன்றான மெகடிமியர் வலயத்திற்கு விஷேடமான பயிர் ஒன்றாகும். அந்த பயிர்செய்கை தொடர்பாக விவசாயிகளின் கவனத்தை மிகையாக ஈர்ப்பதன் மூலம் பிரதேச விவசாயிகளின் வாழ்க்கையை வலுவூட்டுவதற்கு முடியுமாக இருந்தம் அது தொடர்பான ஆய்வுகள் மேற்கொண்டு கன்று உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் பயன்படுத்துவதை அதிகரிப்பது தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2017 செப்டம்பர் 30 திகதி அளவில் 1980 இன் 33 ஆம் இலக்க பீடை நாசினிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தை அங்கீகரித்து 37 வருடங்களை அண்மித்த காலமொன்று கடந்துள்ளது. அச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இலங்கையில் விவசாய அலுவல்களுக்காக பயன்படுத்தப்படும் 107 உயிர்புடைய பீடைநாசினிகளில் 47 உம் அறுவடைக்கு முன்னரான காலம் மற்றும் உச்ச மீதித்தொகை தொடர்பாக எல்லை வரையறை விதிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 பொதுமக்களுக்கான சேவைகள் நிறைவேற்றுதல்

2016 இன் 12 ஆம் இலக்க தகவல்களை அறிந்துகொள்ளும் சட்டத்தின் பிரகாரம் திணைக்களம் தகவல் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கருமங்களை நிறைவேற்றுவதற்காக 16 உத்தியோகத்தர்களின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறு பெயர் குறிப்பிட்டுள்ள உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட விடயங்களின் ஒட்டுமொத்த மேற்பார்வை, செயலாற்றுகையை அளவிடுதல் மற்றும் கட்டுப்பாடுகளுக்காக நடைமுறை ஒன்று திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தியிருக்கவில்லை. மேலும் கடந்த கால தகவல்களை அழைத்தல் தொடர்பாக வரையறைகள் காணப்படாமையின் காரணமாக சிக்கல்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன், சில சந்தர்ப்பங்களில் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கால வரையில் தகவல்கள் வழங்கியிருக்கவில்லை.

## 2.8 நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தை செயற்படுத்துதல்

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் மற்றும் இலங்கை நிலைபேறான அபிவிருத்தி சட்டத்திற்கு இணங்கும் தேவையினை திணைக்களம் இனங்கண்டிருந்தது. எனினும் அவற்றின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் இனங்காணல்,

அனைத்து பிரிவுகளினதும் பங்குகொள்ளல், செயற்பாடுகளில் இலக்குகளுடன் வரிசைப்படுத்துதல், அறிவினை பரிமாறிக்கொள்ளல், பயன்படுத்துதல் செயற்பாடுகளுக்காக பொறுப்புச் சொல்லலை வரிசைப்படுத்தல் மற்றும் நாளது வரையான தகவல் முறைமை ஒன்றினை பேணல் ஆகிய செயற்பாடுகள் மீளாய்வாண்டின் போது திருப்திகரமான முறையில் பேணப்பட்டிருக்கவில்லை.

## 2.9 கடமைகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 05 வருட காலப்பகுதியில் மாவட்ட திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகள், பயன்படுத்துதல் மற்றும் சேமிப்பு தொடர்பாக தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக மீதி |
|---|---|---|---|---|---|
| | | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 2,267.70 | 2,266.18 | 1.52 | 0.06 |
| | மூலதன | 1,532.56 | 1,143.48 | 389.08 | 25.39 |
| | **மொத்தம்** | **3,800.26** | **3,409.66** | **390.60** | **10.27** |
| 2014 | மீண்டுவரும் | 2,757.71 | 2,751.83 | 5.88 | 0.21 |
| | மூலதன | 1,516.95 | 1,428.07 | 88.88 | 5.85 |
| | **மொத்தம்** | **4,274.66** | **4,179.90** | **94.76** | **2.21** |
| 2015 | மீண்டுவரும் | 4,057.90 | 3,978.91 | 78.99 | 1.95 |
| | மூலதன | 2,080.35 | 1,806.80 | 273.55 | 13.15 |
| | **மொத்தம்** | **6,138.25** | **5,785.71** | **352.55** | **5.74** |
| 2016 | மீண்டுவரும் | 4,299.26 | 4,184.22 | 115.03 | 2.68 |
| | மூலதன | 1,541.00 | 1,365.31 | 175.69 | 11.40 |
| | **மொத்தம்** | **5,840.26** | **5,549.53** | **290.72** | **4.98** |
| 2017 | மீண்டுவரும் | 4,572.61 | 4,249.66 | 322.95 | 7.06 |
| | மூலதன | 1,790.09 | 1,428.08 | 362.01 | 20.22 |
| | **மொத்தம்** | **6,362.70** | **5,677.74** | **684.96** | **10.76** |

மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகள் மற்றும் பயன்பாடுகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மிகை ஏற்பாடுகள் மேற்கொண்டிருத்தல்**

61 செலவு விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் ஏற்பாடுகளை பயன்படுத்திய பின்னர் சேமிப்பு அந்த செலவு விடயங்கள் தொடர்பான தேறிய நிதிஏற்பாடுகளில் 11 சதவீதம் முதல் 75 சதவீதம் வரை வீச்சு அளவு ஆக இருந்தது.

**2.10 மதிப்பீட்டு மற்றும் உள்ளபடியான வருமானம்**

திணைக்களத்தினால் 2017 ஆண்டிற்கான வருமான குறியீடுகள் 20.03.02.18 கொண்ட வருமானக் குறியீட்டிற்காக ரூபா 280 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 290.7 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவை மதிப்பீட்டு வருமானத்தில் 103.8 சதவீதமாக இருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் 1996 இன் 24 ஆம் இலக்க மண் பாதுகாப்பு (திருத்திய) சட்டம் மற்றும் 1999 இன் 35 ஆம் இலக்க தாவரங்கள் பாதுகாப்பு சட்டம் வினைப்படுத்தும் நிலைமையில் வெற்றிகரமாக எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக திணைக்களத்தினால் செயற்படுத்தி இருக்காமையால் அரசிற்கு பெறக் கூடியதாக இருந்த சில கட்டணங்கள் மற்றும் தண்டப்பண வருமானங்களை இழந்துள்ளன.

(ஆ) திணைக்களத்தினால் சேகரிக்கப்படும் பல்வேறு கட்டண அளவுகள் 6 வருடங்கள் முதல் 20 வருடங்கள் வரையான காலவீச்சு முதல் காணப்பட்ட போதிலும், 2015 ஜுலை 20 திகதிய 01/2015 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் அந்த கட்டண அளவுகளை நிகழ்காலத்திற்கு ஏற்ற விதமாக திருத்தியிருக்கவில்லை.

**2.11 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய விடய இலக்கம் 28501 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 300.00 | 299.56 | 180.00 | 188.02 | 1,000.00 | 588.00 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணக்கக் கூற்றின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4.21 மில்லியன் தொகையாக காணப்பட்டது. அந்த நிலுவை கடனும் 01 வருடம் முதல் 24 வருடங்கள் வரையான காலவீச்சிலிருந்து காணப்பட்ட போதிலும், அந்த மீதிகளை அறவீடு செய்வதற்காக திணைக்களத்திற்கு முடியாதிருந்தது.

## 2.12 வாணிப முற்பணக் கணக்கு

திணைக்களத்தினனால் விடய இலக்க 28502 விவசாய பண்ணைகளைப் பராமரித்தல் மற்றும் விதை விற்பனை தொடர்பான வாணிப முற்பணக் கணக்கு விடயம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த முற்பண விடயங்களுக்காக சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அதன் நிதி விளைவுகளை முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு கீழே காண்பிக்கப்படுகின்றன.

| முற்பணக் கணக்கு விடயம் | நிதி விளைவுகள் | | | |
|---|---|---|---|---|
| | 2017 | | 2016 | |
| | இலாபம் கருதுகோள் கட்டணம் இன்றி | இலாபம் கருதுகோள் கட்டணத்துடன் | இலாபம் கருதுகோள்கள் கட்டணம் இன்றி | இலாபம் கருதுகோள்கள் கட்டணத்துடன் |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| விவசாய பண்ணைகள் பராமரிப்பு மற்றும் விதைகள் விற்பனை | 190.91 | 159.38 | 104.44 | 61.67 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வாணிப முற்பணக் கணக்கு தொடர்பாக முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்று வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) முற்பணக் கணக்கின் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 43.29 மில்லியன் தொகையாக காணப்பட்ட போதிலும், அந்த நிலுவை மீதியை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டு இறுதி வரையும் திணைக்களத்திற்கு முடியாதிருந்தது.

## 2.13 கொடுக்கல் வாங்கல்கள் தீர்த்து மூடிவிடும் அலுவல்களை நடாத்திச் செல்வதற்கான முற்பணக் கணக்கு

அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 05 முற்பணக் கணக்கு விடயங்களின் கொடுக்கல் வாங்களை தீர்த்து மூடிவிடும் அலுவல்களை நடத்திச் செல்லல் திணைக்களத்திற்கு சாட்டப்பட்டிருந்தது. அந்த கொடுக்கல் வாங்கல்கள் தீர்த்து மூடிவிடும் அலுவல்கள் 1991 திசெம்பர் 23 திகதி முதல் 2004 ஜனவரி 01 திகதி வரை காலவீச்சினுள் முடிவாக்கப்பட வேண்டியிருந்தது. 2017 திசெம்பர் 31 திகதி அளவில் 13 வருடங்கள் முதல் 26 வருடங்கள் வரையான வீச்சிலான காலதாமதம் ஒன்று ஏற்பட்டிருந்த போதிலும், அந்த கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து மூடிவிடும் அலுவல்களை பூர்த்தி செய்திருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்து மூடிவிடும் அலுவல்களை நடத்தி செல்வதற்காக 4 முற்பணக் கணக்குகள் தொடர்பான அங்கீகரிக்கப்படாத திரண்ட தொழிற்படு நட்டம் ரூபா 65.84 மில்லியனாக இருந்த போதிலும், அந்த தொழிற்படு நட்டத்தை

பதிவழிப்பதற்கு முறைசார் விதமாக நடவடிக்கை எடுத்து முடிவாக்குவதற்கு மீளாய்வாண்டு இறுதி அளவிலும் திணைக்களத்திற்கு முடியாதிருந்தது.

(ஆ) அந்த கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து மூடிவிடும் அலுவல்கள் நடத்தி செல்வதற்கான முற்பணக் கணக்கொன்று முடிவாக்க வேண்டிய காலம் 26 வருடங்களை மிகைத்திருந்தது. அந்த முற்பணக் கணக்கின் கூட்டுத்தொகை ரூபா 1.30 மில்லியன் தொகைக்கான அறவிடவேண்டிய மீதி மற்றும் கூட்டுத்தொகை ரூபா 76,157 தொகைக்கான தீர்க்கப்பட வேண்டிய மீதிகள் காணப்பட்டன. அந்த மீதிகள் 2017 திசெம்பர் 31 திகதி அளவிலும் அறவீடு செய்வதற்கு அல்லது தீர்ப்பதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தது.

### 2.14 நிமித்த துணை கட்டுநிதி வழங்குதல்

நிதிப்பிரமாணங்கள் 371 இன் பிரகாரம் கருமம் முடிவடைந்த உடன் பெற்றிருந்த நிமித்த கட்டுநிதியை தீர்க்க வேண்டுமெனினும், திணைக்களத்தினால் 26 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 1.5 மில்லியன் தொகைக்கான நிமித்த துணைக்கட்டுநிதி கருமங்கள் முடிவடைந்து 3 மாதங்கள் முதல் 11 மாதங்கள் வரையான வீச்சுடைய காலதாமதத்தின் பின்னர் துணைக்கட்டுநிதி தீர்க்கப்பட்டிருந்தது.

### 2.15 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழ் உள்ள 6 பொது வைப்புக்களில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 161.5 மில்லியன் தொகை ஆகக் காணப்பட்டது. அம்மீதியில் 2 வருடங்களை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 3 மில்லியன் தொகைக்கான 81 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணங்கள் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.16 பதிவேடுகளும் ஏடுகளும் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழ் குறிப்பிட்டுள்ள பதிவேடுகள் முறைப் பிரகாரம் மற்றும் நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 502(2) இல் 11வது பிண்ணினைப்பு | நாளதுவரை ஆக்கி இருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | கணினிகள், துணைக் கருவிகள் மென்பொருள்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளதுவரை ஆக்கி இருக்கவில்லை. |
| (iii) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | நாளதுவரை ஆக்கி இருக்கவில்லை. |
| (iv) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | நாளதுவரை ஆக்கி இருக்கவில்லை. |
| (v) | வாகனங்களை அட்டவணைப்படுத்தும் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(2) | நாளதுவரை ஆக்கி இருக்கவில்லை. |
| (vi) | ஆய்வுகள் தொடர்பான பதிவேடு | 2010 செப்டம்பர் 23 ஆம் திகதிய 08/2010 இலக்க விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பந்தி 4 | தயாரித்திருக்கவில்லை. |
| (vii) | கன்றுகள் உற்பத்திப் பதிவேடு | 2010 செப்டம்பர் 23 ஆம் திகதிய 08/2010 ஆம் இலக்க விவசாய பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | முறைசார் விதமாக தயாரித்திருக்கவில்லை. |
| (viii) | எரிபொருள் நுகர்வுப் பதிவேடு | 2017 அக்தோபர் 13 ஆம் திகதிய அ.விக/03/12/ 2017/02 இலக்கங் கொண்ட விவசாயத் திணைக்களத்தின் இயந்திரப் பதிவுப் புத்தகங்கள் பேணல் தொடர்பான வழிகாட்டல் | நாளதுவரை ஆக்கியிருக்கவில்லை. |

**2.17 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) நியதிச் சட்ட ஏற்பாடுகள் | |
| (i) 1996 இன் 24 ஆம் இலக்க மண் பாதுகாப்பு (திருத்திய) சட்டத்தின் பிரிவு 3.1(இ) | சட்டம் அங்கீகரிக்கப்பட்டு 20 வருடங்களை கடந்திருந்த போதிலும் மண் பாதுகாப்பு நிதியம் ஒன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 1999 இன் 35 ஆம் இலக்க தாவர பாதுகாப்புச் சட்டம் | சட்டம் அங்கீகரிக்கப்பட்டு 18 வருடங்கள் கடந்திருந்த போதிலும், சட்டத்தின் விடயங்களை முறைசார் விதமாக செயற்படுத்துவதற்கு தேவையான பிரமாணங்கள் தயாரித் திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 504(1)(அ), (ஆ),(இ) மற்றும் (ஈ) | ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் வியாபாரக் கடன்பட்டோர், வியாபாரக் கடன்கொடுத்தோர், மூலப்பொருள், களஞ்சியப் பண்டங்கள், வழங்கல்கள் மற்றும் முடிவுற்ற பண்டங்கள் தொடர்பான கூற்றுக்கள் தயாரித்து அந்த காலாண்டை தொடர்ந்து வரும் முதல் மாதம் 15 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதி ஒன்றுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ii) நிதிப்பிரமாணம் 505 | ஒவ்வொரு மாதத்திற்கு ஒருமுறை இருப்புக்கள் மற்றும் சில பண்ட விடயங்களை அவற்றின் இருப்பு பேரேட்டு மீதியுடன் முழுமையான பௌதீக மெய்மையாய்தல் பரிசோதனைக்கு ஆளாக்கி அதன் விளைவுகளையும் ஏதேனும் ஒழுங்கீனங்கள் இருந்தால் அது தொடர்பாக குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களின் கீழ் நடவடிக்கை எடுத்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதி ஒன்றுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |

**2.18 மனித வள முகாமைத்துவம்**

**இணைக்கப்பட்ட, உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட உள்ளபடியான, வெற்றிடமான பதவியணி தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தினால் ஆளணி வேதனச் செலவின் தொகுதிக்காக ரூபா 2,730.6 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நபரொருவருக்கான செலவினம் ரூபா 272,134 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 985 | 446 | 539 |
| (ii) | மூன்றாம் நிலை | 208 | 81 | 127 |
| (iii) | இரண்டாம் நிலை | 3,757 | 2,771 | 986 |
| (iv) | ஆரம்ப நிலை | 6,132 | 5,391 | 741 |
| (v) | அமைய/ஒப்பந்த | 1,505 | 1,345 | 160 |
| | மொத்தம் | 12,587 | 10,034 | 2,553 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் சில பிரிவுகளில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் எண்ணிக்கையை மிகைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தி இருந்தமையால் சில பிரிவுகளில் பாரிய அளவில் வெற்றிடங்கள் ஏற்பட்டிருந்தமையால் விஷேட கடமைகளுக்காக சேர்க்கப்பட்டிருந்த தொழிலாளர்கள் அவ் வெற்றிடங்கள் காணப்படும் பிரிவுகளில் வேறு கடமைகளை மேவகை செய்வதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) 2016 ஆண்டில் சேவை ஒழுங்குபடுத்தும் பயிற்சி நிறுவனத்தின் 05 உதவி விவசாயப் பணிப்பாளர்கள் பயிற்சி வழங்கும் விடயங்களுக்காக இணைக்கப்பட்டிருந்ததுடன், ஒட்டு மொத்தமாக கணித்த போது ஒரு உத்தியோகத்தரினால் வருடாந்தப் பயிற்சி வழங்கள் மணித்தியாலயம் 39 முதல் 100 மணித்தியாலயங்கள் வரையான வீச்சு அளவில் மாத்திரம் நடத்தப்பட்டிருந்தது.